எபிகாஸெட்டின் இணைப்பு பதிப்பு



இதயம் அளிக்கும்

இராமாயணம்

(ஆரண்ய காண்டம்)



தயாரிப்பு:
மணியன்

இசை:
வி.குமார்

வண்ணப் படங்கள்:
கோபுலு

கதை அமைப்பு & டைரக்ஷன்
டி.எஸ்.நாராயணஸ்வாமி

விலை ரூ. 45-

எபிகாஸெட்

இதயம் அளிக்கும்
புண்ணிய பாரதத்தின்
புனித காவியம்

இராமாயணம்

ஆரண்ய காண்டம்



முன்னுரை :

மணியன் : உன்னதமான பண்புகள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்ற உத்தமமான மனிதன் ஸ்ரீராமன். அயோத்யா காண்டத்தில் ராமனின் எளிமை, தூய்மை, அன்பு, அடக்கம், தயை, சகோதர பாசம், தியாக உணர்வு, நட்பின் திறன் அனைத்தையும் விளக்கும் சம்பவங்களைப் பார்த்தோம்.

ஸ்ரீராமன் பதவியும் புகழும் கண்டு பெருமிதம் கொள்ளாதவன். துன்பமும், துயரமும் கண்டு அஞ்சி நடுங்காதவன். தாய் தந்தையரிடம் பக்தியும், மரியாதையும் கொண்டவன். சகோதரர்களிடம் அளவு கடந்தபாசம் உடையவன். மனத்தாலும் பிற மாதரை எண்ணாத உத்தமமான கணவன் அவன். நட்பிற்கு இலக்கணமாகத் திகழ்ந்த செம்மல் அவன். இத்தகைய பண்பாளனை ஸ்ரீராமனை முந்திய காஸெட்டில் அயோத்தியா காண்டத்தில் கண்டோம். தொடர்ந்து தண்டகாரண்ய வனத்தில் தவக்கோலத்தில் வாழ்ந்த ஆரண்யராமனை இப்போது சந்திக்கப் போகிறோம். இது இதயம் வழங்கும் இராமாயணத்தின் மூன்றாவது எபிகாஸெட். கவனத்துடனும் சிரத்தையுடனும் கேளுங்கள்...



கதை சொல்பவர் : சீதா லட்சுமண சமேதராக ஸ்ரீராமன் தன் தவ வாழ்க்கையை தண்டகாரண்யவனத்தில் தொடங்கினுன். பகவான் ஸ்ரீமன் நாராயணனை மானிட வடிவில் தரிசிக்க வேண்டுமென்று காலம் காலமாகத் தவம் புரிந்து காத்திருந்த முனிவர்களும், மகரிஷிகளும் தங்கள் தவப்பயனை அடைந்தனர். ஒவ்வொரு நாளும் ஸ்ரீராமனும், மனைவி சீதாதேவியும், தம்பி லட்சுமணனும் ஒவ்வொரு மகரிஷியின் விருந்தினர்களாக இருந்து அவர்கள் ஆசிகளைப் பெற்றனர்.

அத்ரி முனிவரும் அவர் மனைவி அனுசூயா தேவியும் ராமன்பால் அளவு கடந்த பக்தி வைத்திருந்தார்கள். ராம—லட்சுமணர்களும் சீதையும் அவர்கள் ஆசிரமத்தில் பல நாட்கள்



தங்கினுர்கள். அனுசூயா தேவி ஒவ்வொரு நாளும் சீதாதேவியை சிங்காரித்து தன் ஆபரணங்களையெல்லாம் அணிவித்து மகிழ்ந்தாள். தொடர்ந்து இராமன் ஸரபாங்கர், ஸுதீஷ்ணர் ஆகிய மகரிஷி களின் ஆசிரமத்தில் தங்கி அவர்கள் நல்லாசிகளைப் பெற்றுன். இதற்குள் சில ஆண்டுகள் கழிந்தன. அதன் பின்பு ஸ்ரீராமன், மனைவியுடனும் தம்பியுடனும் அகஸ்திய மாமுனி



வரின் ஆசிரமத்திற்கு வந்து அவருடன் சிலநாட்கள் தங்கினன். அவரிடம் விடைபெற்றுப் புறப்படும் முன் ஒருநாள். . .

ராமன்: அகஸ்திய மாமுனிவர் அவர்களே, தங்கள் அன்பினுலும், ஆசியாலும் என் தவவாழ்க்கைஇங்கே உயர்வாக அமைந்தது. தங்களுக்கு நன்றி.



அகஸ்: ராமா! உன் பாதங்கள் பட்டதினால் தண்டகாரண்ய வனமே புனிதமடைந்துள்ளது. தந்தை சொல் காக்க மட்டும் நீ கானகம் வரவில்லை. எங்களைப்போன்ற தவமுனிவர்களைக் கொடியவர்களிடமிருந்து ரட்சித்து எங்கள் தவத்தைக் காக்கும் கடமையைச் செய்யவும் நீ இந்த வனவாசம் ஏற்றுள்ளாய். நீ தவக்கோலம் பூண்டது தவம் செய்ய அல்ல; தவம் புரிவோரைக் காக்க.



ராமன்: அந்தப்பணி எனக்குக் கிட்டியது தங்களைப் போன்றோர் களின் நல்லாசியால் தான். என்னால் முடிந்தவரை இந்த வனவாசத்தில் அந்தப் பணியைச் செய்கிறேன்.

அகஸ்: ராமா, இதோ என் தவவலிமையால் நான் பெற்ற பெறற் கரிய ஆயுதங்கள் — வல்லமை வாய்ந்த அஸ்திரங்கள்! போர்த்தொழில் புரிந்து, துஷ்டர்களை அழித்து நல்லவர் களைக் காக்கும் பொறுப்பு க்ஷத்ரியனான உன்னுடையது. அந்தப் பணியில் இவை உனக்கு உதவட்டும்.

கதை சொல்பவர் : என்று கூறி, அகஸ்தியர் பல சக்தி வாய்ந்த ஆயுதங்களையும், அஸ்திரங்களையும் ராம—லட்சுமணர்களுக்குத் தந்தார். ஆபத்துக்களிலிருந்து காத்துக் கொள்ளும் சில மந் திரங்களை உபதேசித்தார். ராமன் மேற்கொண்டு தொடர வேண்டிய பணிகளையும் கூறினார்.

அகஸ்: ராமா, இங்கிருந்து சில காத தூரத்தில் பஞ்சவடி என்ற இடம் உள்ளது. அது இயற்கை எழில் கொஞ்சும் இனிமை யான இடம். அமைதியான பஞ்சவடியின் சூழ்நிலை உன் தவ வாழ்க்கைக்கு ஏற்ற இடம். , நீங்கள் அங்கே பர்ணசாலை அமைத்துக்கொண்டு சில காலம் வாழுங்கள். எந்த உயர்ந்த லட்சியங்களுக்காக நீ இப்பூவுலகில் தோன்றியிருக்கிறாயோ, அவை நிறைவேறக் காரணமான சம்பவங்கள் அந்தப் பஞ்ச வடியில் நிகழும். எல்லாம் நன்மைக்கே. சென்று வாருங்கள்.

ராமன்: நன்றி, முனி சிரேஷ்டரே! சென்று வருகிறோம்!

கதை சொல்பவர் : அகஸ்தியர் கூறியபடி ராம—லட்சுமணர்களும், சீதையும் பஞ்சவடி வந்து சேர்ந்தனர். லட்சுமணன் அங்கே அழகிய பர்ணசாலை ஒன்றை அமைத்தான். மூவரும் அமைதியான தவ வாழ்க்கையை மேற்கொண்டனர். எப்போதும் ஆன்மீக சிந்தனை, தியானம், நல்ல எண்ணங்கள் நல்ல செயல்கள் அவ்வப்போது ஆன்றோர்களின் சத்சங்கம். பிறர் தவம் காத்து அமைதிக்கு அடிகோலும் அரியபணி. இப்படியாக அவர்கள் வாழ்க்கை நடந்து கொண்டிருந்தது. காலம் நகர்ந்து கொண் டிருந்தது.

தண்டகாரண்யத்தின் ஒரு பகுதி இலங்கையை ஆண்டு வந்த ராவணேஸ்வரன் என்ற அரக்கனின் ஆதிக்கத்திலிருந்தது. பாரதத்திற்கு தெற்கே கடலில் அமைந்திருந்த தீவுதான் தென் னிலங்கை. ராவணன் அதன் சக்கரவர்த்தி. அவன் அரக்கர் குலத்தலைவன். பிரம்மதேவனின் வழிவந்தவன். பிரம்மனிட மிருந்து வரங்கள் பல பெற்றவன். சாஸ்திரங்களில் வல்லவன். வீணை வா ப்பதில் சூரன். கைலாய மலையையே தூக்குமளவுக்கு

துணிச்சலும், தோள் வலிமையும் மிக்கவன். ஆனால், கர்வமும் தான் என்ற அகந்தையும், காமமும் குரோதமும் மிகுந்த அரக்க குணம் படைத்தவன். அவனுக்குத் தலைகள் பத்து. கரங்கள் இருபது. ஒவ்வொரு குணமும் ஒரு தலைக்குரியதாகி, அவன் பத்து வித குணங்களுடன் பத்து வித மனிதனாக வாழ்ந்தான். வீரம், விவேகம், ஞானம், சாதுர்யம் ஆகிய நான்கு நல்ல குணங்களுக்கான நாலு தலைகளும், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாஸ்சர்யம் ஆகிய ஆறு துர்க் குணங்களுக்கான ஆறு தலைகளும் சேர்ந்த பத்துத்தலை ராவணன் அவன்.

இராவணனின் பந்துக்களான கரன், தூஷணன் என்ற இரண்டு அரக்கர்கள் தண்டகாரண்யவனத்தின் சேனாதிபதிகளாக இருந்தனர். நல்லவர்களுக்குத் தீங்கிழைத்து, முனிவர்களின் தவத்தைத் தடுத்து, வனங்களை எல்லாம் அழித்து அவர்கள் கொடுமை புரிந்து வந்தனர். அவர்களுக்கு ஒரு சகோதரி. அவள் பெயர் சூர்ப்பனகை. தாடகையைப்போல கொடிய அரக்கி அவள். மாயா ஜாலங்கள் புரிபவள். அவள் ஒரு வகையில் ராவணனுக்குச் சகோதரி முறை. ஒரு நாள் பஞ்சவடிப் பக்கம் செல்கையில் அங்கே ராம லட்சுமணர்களையும், சீதையையும் சூர்ப்பனகை கண்டாள்.

சூர்ப்பனகை: ஆகா! இந்த மானிடர்கள் எவ்வளவு அபூர்வமாக இருக்கிறார்கள். அதிலும் அதோ ஆண்மை திகழும் மேனியோடு எத்தனை அழகுடன் இருக்கிறான் ஒருவன். அவனை நான் நிச்சயம் மணந்து கொள்ளவேண்டும். ஆனால்... அந்தப்பெண் அவன் அருகில் இவ்வளவு உறவாடி நிற்கிறாளே, அவன் மனைவியாக இருக்குமோ...! அவனைப் பார்த்தால் தவமுனிவன் போல் இருக்கிறான்... தபஸ்விக்குப் 'பக்கத்தில் பெண் எதற்கு? எப்படியானால் என்ன, அவனை நான் மணக்க வேண்டும். அவள் தடுத்தால் அவளைக் கொன்று தின்று விட்டு அந்த இடத்தைப் பிடித்துக்கொள்கிறேன்.

கதை சொல்பவர்: என்று தனக்குள்ளேயே பேசித் தீர்மானித்துக் கொண்டு, தன் மாயா சக்தியால் தன்னுடைய கோரமான உருவத்தை மாற்றிக்கொண்டு அழகான ஒருபெண்ணைப்போல உருவம் எடுத்துக்கொண்டு லட்சுமணன் எங்கோ சென்றிருந்த வேளை பார்த்துப் பர்ணசாலையில் நுழைந்தாள். ராமனிடம் சென்று தயக்கம் ஏதுமில்லாமல் தன்னை மணந்து கொள்ளும் படி வற்புறுத்தினாள்.

ராமன்: அம்மா... என்னை மன்னித்துவிடு. நான் ஏற்கெனவே மணமானவன். இதோ இவள்தான் என் மனைவி சீதை. இப்பிறவியில் நான் ஏகபத்னி விரதன். மற்றெல்லாப் பெண்களையும் தாயாகவும், சகோதரியாகவுமே எண்ணுபவன் தங்கள் விருப்பம் தவறானது. சென்று வாருங்கள்.

கதை சொல்பவர்: ராமன் இப்படிச் சொன்னதும் சூர்ப்பனகை கொஞ்சம் வாதாடிப் பார்த்தாள். கொஞ்சிப் பார்த்தாள்.

கெஞ்சியும் பார்த்தாள். அவள் முயற்சி பலிக்கவில்லை. ராமன் அவளை ஏறிட்டுக்கூடப் பார்க்காமல் அங்கிருந்து சென்றுவிட்டான். சூர்ப்பனகைக்கு ஒருபக்கம் ஏமாற்றம், மறுபக்கம் கோபம். இருந் தாலும் கொஞ்சம் நம்பிக்கை.

சூர்ப்: இவன் போனால்போகட்டும். மடையன்...! இன்னொரு மானிடன் இருக்கிறானே... அவனும் அழகாகத்தானே இருக் கிறான். அவன்கூட வேறு பெண்ணும் இல்லை. அவன் பிரம் மச்சாரியாகத்தான் இருக்கவேண்டும். அவனைச் சரிக்கட்டிப் பார்ப்போம்.

கதை சொல்பவர்: என்று சூர்ப்பனகை சற்றுநேரம் காத்திருந் தாள். அதற்குள் லட்சுமணன் வந்துவிட்டான். சூர்ப்பனகை அவனிடம் சென்று ராமனிடம் கேட்டது போலவே தன்னை மணந்துகொண்டு மகிழ்ச்சியாக இருக்கும்படி கேட்டாள். ராம னாவது இனிமையான குரலில் முடியாது என்று சொன்னான்.. ஆனால், லட்சுமணனோ...

லட்சு: சீ.. பாதகீ! என்ன வார்த்தை கேட்டாய்... உனக்கு நாணமாக இல்லை? முன்பின் தெரியாத ஆடவனிடம் இப் படிக் கேட்க வெட்கமாயில்லை. மரியாதையாகப் போய்விடு இங்கிருந்து. இல்லையேல் பெண் என்றும் பார்க்கமாட்டேன். ஜாக்ரதை.

கதை சொல்பவர்: 'உன்னை நான் விடப்போவதில்லை. நீ என்னை மணந்து கொள்ளத்தான் வேண்டும்' என்று வாதாடி சூர்ப்பனகை லட்சுமணனை நெருங்கினாள். கோபத்தில் லட்சுமணன் தன் வாளை உருவி அவள் காதையும், மூக்கையும் துண்டித்துவிட்டான். சூர்ப்பனகை ஓவென்று அலறிக்கொண்டு ஓடினாள். நேராகத் தன் அண்ணன்மார்கள் கரதூஷணர்களிடம் சென்று தன்னை இரண்டு மானிடர்கள் பஞ்சவடியில் மானபங்கப்படுத்திவிட்ட தாகப் பொய்க்கூறிக் கதறினாள். கரதூஷணர்கள் உடனே அசுரப்படைகளைத் திரட்டிக்கொண்டு பஞ்சவடி சென்று, ராம லட்சுமணர்கள்மீது போர் தொடுத்தனர். சரமாரியாகப் பொழிந்த ராமலட்சுமணர்களின் பாணங்களால் அவர்கள் சேனை சின்னா பின்னமாகியது. கரதூஷணர்கள் இருவரும் களத்திலேயே மாண்டனர். சூர்ப்பனகை விடவில்லை. நேராக ஆகாய மார்க்கமாக இலங்கை சென்றாள். ராவணன் அரண்மனையில் நுழைந்தாள். அப்போது ராவணன் சிவபூஜை செய்து கொண்டிருந்தான்.

பாட்டு:

கங்காதர கௌரீ மஹேஸா...
த்ருபுராந்தக ஜ்யோதிப் பிரகாஸா...
ஹாலா ஹலதர... பரமேஸா....

சந்த்ர சேகர... சாம்பசிவேஸா... (சந்)
சிவாய பரமேஸ்வராய சசிசேகராயா நம ஓம்
பவாய குணசம்பவாய சிவதாண்டவாய நம ஓம்
(சிவா)

சிவ சிவ சிவ சிவ சிவசம்போ...
ஹர ஹர ஹர ஹர ஹரசம்போ
ஜெய ஜெய சங்கரா... ஹர ஹர சங்கரா....

கதை சொல்பவர்: சிவபூஜையை முடித்துக்கொண்டு ராவணன் கொலுமண்டபம் வந்தான். அப்போது கண்ணீரும் கம்பலையுமாக... அலங்கோலமான நிலையில் அவன் காலடியில் வந்து விழுந்தாள் சூர்ப்பனகை...

ராவணன்: சகோதரி.., இதென்ன கோரம்... உன் மூக்கும், காதும் அறுந்து முகமெல்லாம் ரத்தம் சொட்ட.. என்ன நடந்தது...? யார் செய்த கொடுமை இது...?

சூர்ப்: அண்ணு.. அரக்கர் கோமானே... எப்படிச் சொல்வேன்.. தேவர்களையும் மூவர்களையும் அடக்கியாளும் அரக்கர் தலைவன் ராவணேஸ்வரனின் தங்கை என்றும் பாராமல் சாதாரண மானிடப் பதர்கள் இருவர் என்னை இந்த நிலைக்கு ஆளாக்கி விட்டனர் அண்ணு...



ராவணன்: என்ன மானிடர்களா...? யாரவர்கள், எங்கிருக்கிறார்கள்? சொல்... அவர்கள் தலையைக் கிள்ளி அந்த ரத்தத்தால் உனக்கு அபிஷேகம் செய்து பழிவாங்கிவிடுகிறேன்...

சூர்ப்: பொறுமையாகக் கேள் அண்ணா – தண்டகாரண்யத்தில் பஞ்சவடியில் இரண்டு மானிடர்கள் தஞ்சம் புகுந்துள்ளார்



கள். அவர்கள் கோசல நாட்டு ராஜகுமாரர்கள்... தபஸிகள் போல வேடம்தரித்து வந்திருக்கிறார்கள். மூத்தவன் பெயர் ராமன்... இளையவன் லட்சுமணன்.

ராவ: தவ வேடத்தில் அரசகுமாரர்களா? அவர்களா? உன்னை இந்நிலைக்கு ஆளாக்கினார்கள்! காரணம்...?

சூர்ப்: அழகிய உருக்கொண்டு பஞ்சவடிப் பக்கம் போன என்னை வலிய வந்து அண்ணா... எப்படிச் சொல்வேன்... மான பங்கப்படுத்தி...

ராவ: சண்டாளர்கள். இப்படி நடக்கும்போது கரனும் தூஷண னும் பார்த்துக் கொண்டு சும்மாவா இருந்தார்கள்?



சூர்ப்: இல்லையண்ணு... போர் தொடுத்தார்கள் அந்த மானிடர்கள் மேல்... அவர்கள் நம்மைவிட மாயாவிகளாக இருக்கிருர்கள். சரமாரியாக அவர்கள் பொழிந்த அம்புமழை அரக்கர் சேனையை அழித்துவிட்டது அண்ணு! கர தூஷணர்கள் களத்தில் மாண்டுவிட்டார்கள் அண்ணு!...

ராவ: ஆ! என்ன, கர தூஷணர்கள் மடிந்து விட்டார்களா? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே சூர்ப்பனகா! தவவேடத்தில் இருந்த இரண்டு மானிடர்கள் என்ருய்... இப்போது...

சூர்ப்: அண்ணு! அவர்கள் உண்மையில் தவம் செய்ய வரவில்லை. அந்த ராமனின் அழகிய மனைவி சீதையும் உடன் வந்திருக்கிருள். ஆஹா.. அவள் எத்தனை அழகு தெரியுமா... இவ்வுலகில் அவள் மாதிரி அழகியை யாருமே பார்த்திருக்க முடியாது. பொன்னிற மேனி. கவர்ச்சிகரமான கண்கள்.. அலையலையாகக் கூந்தல்... அப்பப்பா! அவளைப் பார்த்தால் அண்ணு, பெண்களே ஆசைப்படுவார்கள்! தங்களைப் போன்ற அரக்கர் கோமானின் ஆசைநாயகியாக இருக்க வேண்டியவள், அவள் அந்த மானிடனுக்குச் சற்றும் பொருத்தமில்லாதவள்.

ராவ: உண்மையாகவா...

சூர்ப்: ஒருமுறை நீங்கள் அவளைப் பார்த்தால்..

ராவ: அதுவும் சரிதான். உன்னை மானபங்கப்படுத்திய அந்த மானிடர்களை சரியான முறையில் பழிவாங்க அதுவும் ஒரு வழிதான்.

சூர்ப்: என்னண்ணு சொல்கிறீர்கள்...?

ராவ: அந்தச் சீதையை சிறையெடுத்து வந்து விடுகிறேன்.

சூர்ப்: சரியான யோசனை அண்ணு!

ராவ: அந்த மானிடர்கள் அவளைப் பிரிந்து அழுது புலம்பட்டும். என் தங்கையை இழிவுபடுத்தி அழவைத்த அவர்களுக்கு அது சரியான தண்டனை இல்லையா?

சூர்ப்: அண்ணு... அவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல. கர தூஷணர்களையும் சேனைகளையும் இருவராகவே அழித்தவர்கள். தாங்கள் எதற்கும்...

ராவ: சூர்ப்பனகா. ராவணன் வீரன் மட்டும் அல்ல. விவேகியும் கூட. அஞ்சாமல் எதிர்த்து அழிக்கவும் எனக்குத் தெரியும். வஞ்சித்து வலைவிரித்துப் பழி வாங்கவும் தெரியும். நீ நிம்மதியாகப் போய்வா... நான் நினைத்த காரியத்தை முடிக்க தண்டகாரண்யத்தின் எல்லையில் வாழும் மாமன் மாரீசனை உடனே பார்க்க வருவதாகச் சொல்..போ...

கதை சொல்பவர் : சூர்ப்பனகையின் பேச்சு.. ராவணன் மனதில்

தீய எண்ணத்தை வளர்த்தது. சீதையைப் பார்க்காமலே அவள் ஆசை கொண்டான். அவளைச் சிறையெடுக்க நினைத்தான். ஆசை அவன் ஞானத்தை மறைத்தது. காமம் அவன் தர்மத்தைக் கொன்றது. உடனே விண்வழியே தன் புஷ்பக விமானத்தில் புறப்பட்டு தண்டகாரண்யம் வந்து மாரீசன் முன் நின்றான்.

மாரீசன்: இலங்காபுரி வேந்தே! ராவணேஸ்வரா..! வரவேண்டும்... வரவேண்டும்... அடிமையான என்னை அழைக்காமல் தாங்களே என்னைத் தேடி வந்தது..

ராவ: மாரீசா! மாமனே! இங்கே உங்கள் எல்லையில் நடந்ததெல்லாம்...

மாரீ: அறிந்தேன் பிரபு..

ராவ: இங்கே நம் பஞ்சவடியில் தஞ்சம் புகுந்த மானிடர்கள் சகோதரி சூர்ப்பனகையை மானபங்கப்படுத்தியிருக்கிறார்கள். கர தூஷணர்களையும் சேனைகளையும் கொன்று குவித்திருக்கிறார்கள். இத்தனையையும் பார்த்துக்கொண்டு நீ கோழை போல....

மாரீ: மன்னிக்க வேண்டும். தவறு சூர்ப்பனகையுடையதுதான். ஏதோ தவமியற்ற வந்தவர்களிடம் இவள் வம்பு செய்து வாங்கிக் கொண்ட வினை இது. இதற்காகக் கர தூஷணர்கள் வீணாகப் போர் தொடுத்து, தண்டகாரண்யத்தின் காவற்படை முழுவதுமே அழித்து விட்டனர்.

ராவ: போதும் நிறுத்தடா.. என்னிடமே விதண்டாவாதம் பேசுகிறாயா.. மானிடர்கள் நம் எதிரிகள்.. அவர்கள் பக்கம் நியாயம் பேச உனக்கென்ன தைர்யம்...

மாரீ: அப்படியில்லை பிரபு.. உண்மையில் நடந்ததைத் தங்களுக்குத் தெரிவிக்கவே...

ராவ: எல்லாம் எனக்கு தெரியும்.. நான் ஒரு முடிவுடன்தான் வந்திருக்கிறேன். தங்கையை மானபங்கப்படுத்திய அந்த மானிடர்களைப் பழிவாங்க, அந்த ராமனின் மனைவியை— சீதையை நான் தூக்கிச் செல்லப் போகிறேன்.

மாரீ: பிரபு.....

ராவ: ஆம்; அதற்கு உன் உதவி தேவை. அதனால்தான் உன்னிடம் வந்தேன்.

மாரீ: பிரபு! தாங்கள் பிரம்மதேவன் வழிவந்தவர்.. நீதி சாஸ்திரங்கள் தெரிந்தவர்... யாரோ செய்த தவறுக்காக ஒரு பாபமும் செய்யாத ஒரு பத்தினிப் பெண்ணை சிறையெடுப்பது பாபமல்லவா? வேண்டுமானால் சூர்ப்பனகையை ஊனமாக்கிய அந்த லட்சுமணன் தலையைக் கொய்து தங்கள் காலடியில் வைக்கிறேன். பிறன் மனைவியைக் கவர்வது பெரும்பாவம்.. அதற்கு என்னையும் தூண்டாதீர்கள் பிரபு..!

ராவ: பாப புண்யங்கள் பற்றி எனக்கே எடுத்துக்கூறும் அளவுக்கு உனக்குத் துணிவு வந்துவிட்டதா மாரீசா?

மாரீ: இல்லே பிரபு! தங்களிடம் பற்றும் பாசமும் கொண்டவன் நான். பாவத்தினுல் தாங்கள் அழிவைத் தேடிக் கொள்ளக் கூடாதே என்றுதான் பயப்படுகிறேன்.

ராவ: அதற்குப் பயப்படுகிருயா..? அல்லது ஏற்கனெவே ஸுபாஹுவைக் கொன்று, உன்னைக் கடல்வரை துரத்திய இந்த ராமலட்சுமணர்களின் பாணத்திற்குப் பயந்து தர்ம நியாயம் பேசுகிருயா..?

மாரீ: அதுவும் ஒரு வகையில் உண்மைதான் பிரபு.. அவர்கள் சாமான்யமானிடர்கள் அல்ல. ராம லட்சுமணர்களின் அஸ்திர வித்தை அலாதியானது. ராமனின் மனேவியை தாங்கள் அபகரிக்க வந்திருக்கும் எண்ணம் தெரிந்தால் கூடப் போதும்.. அந்த லட்சுமணன் ஒருவனே நம் எல்லோரையும் அழித்து விடுவான்.

ராவ: போதும் நிறுத்தடா அறிவிலி.. என் முன்னேயே அவர்கள் வீரத்தைப் புகழ உனக்கு என்ன தைரியம்? மாமனுயிற்றே என்று உன்னை இப்போது உயிருடன் விட்டேன்.. என்னை—என் தீர்மானத்தை யாரும் மாற்ற முடியாது. எனக்கு எந்த தர்ம நியாயமும் இப்பொழுது தேவையும் இல்லே. அந்தச் சீதையை நான் சிறைப்பிடித்தே ஆக வேண்டும். நன்ருகக் கேள்... நீ உடனே பொன் வடிவ மேனியும் வெள்ளி நிற புள்ளியும் கொண்ட அழகான மாயமானுக மாறி, பஞ்சவடியில் அந்த மானிடர்களின் பர்ணசாலேப் பக்கம் போ.. உன் வடிவிலும் அழகிலும் மயங்கி உன்னைப் பிடித்து வைத்துக் கொள்ள அந்தப் பெண், சீதை விரும்புவாள்.. நீ அவள் கையில் அகப்படாமல் அங்கேயே மேய்ந்து கொண்டிரு. மானைப் பிடித்துத் தர அந்த மானிடனை ஏவுவாள் அந்த மங்கை. உன்னைப் பிடிக்க அந்த ராமலட்சுமணர்கள் முயலும்போது நீ அவர்கள் கையில் அகப்படாமல், அவர்கள் உன் பின்னே தொடரும்படிக் காட்டில் வெகுதூரம் அழைத்துச் சென்று விடு. அவர்களை சீதையிடமிருந்து கொஞ்ச நேரம் பிரிக்க வேண்டியது உன் வேலே. சீதையை அவர்களிடமிருந்து நிரந்தரமாகப் பிரிக்க வேண்டியது என் வேலே. புரிந்ததா....

மாரீ: புரிந்தது பிரபு... புரிந்தது! ஆனுல், இறுதியாக வேண்டுகிறேன்.. எதிரியை நேருக்கு நேரில் போரில் சந்தித்து வெற்றி பெறுவதுதான் தங்களைப் போன்ற வீரர்களுக்கு அழகு.. இவ்வாறு கோழை போல...

ராவ: என்ன வார்த்தை சொன்னாய்? என்னை விட மூத்தவன் என்றதால் பொறுத்து இதுவரை மரியாதை தந்தேன். இன்னும் சில வினாடிக்குள் நீ என் கட்டளையை நிறைவேற்றப் புறப்படாவிட்டால் உன் சிரசைத் துண்டித்து விடுவேன்.. ஜாக்கிரதை..


மாரீ: ராவணேஸ்வரா! மரணம் என்னை நெருங்கி விட்டது. மானாக மாறிப் போகாவிட்டால் நீ கொன்று விடுவாய்.. மானாகிச் சென்றால் அந்த மானிடன் கொன்று விடுவான். அதர்மத்தின் கைகளில் மடிவதைவிட தர்மத்தின் கையால் மடிவதே மேல்..

ராவ: மடிவதோ — பிழைப்பதோ உன் சாமர்த்தியம். என் உப்பைத் தின்றதற்கு நன்றிக் கடன் செலுத்திவிட்டு அப்புறம் உன் இஷ்டப்படிச் செய்... போ.

காஸட்—பக்கம்: B

இராமாயணம் - ஆரண்யகாண்டம் - இரண்டாம் பகுதி

கதை சொல்பவர் : மாரீசன் மானுருக் கொண்டான். பஞ்சவடியில் அழகிய தங்க மான் ஒன்றைக் கண்ட சீதை அதன் மீது ஆசைகொண்டாள். ஆசைதானே துன்பத்திற்குக் காரணம்? ஆசையெனும் பாசக் கயிற்றில் தான் கட்டுப்படுவதை அறியாத சீதை, அந்த மானை கட்டிப் போட நினைத்தாள். மானைப் பிடிக்க முயன்றாள். மான் அவள் பிடியில் அகப்படவில்லை. அருகில் நின்ற ராமனிடம் அந்த மானைப் பிடித்துத் தரும்படிக் கேட்டாள். எதையுமே தன்னிடம்



கேட்காத சீதை, முதல் முதலாக விரும்பும் ஆசையைப் பூர்த்தி செய்ய விரும்பினுனே, அல்லது ஆசையினுல் விளையும் தீமைகளை அவளே தெரிந்து கொள்ளட்டும் என்று நினைத்தானே என்னவோ... மானைப் பிடிக்க அதன் அருகில் சென்றுன் ராமன். மான் ஓட ஆரம்பித்தது. மானுக வந்த மாரீசன் தன் கடமையைச் செய்யத் தொடங்கினுன்.

லட்சு: அண்ணு, தாங்கள் இங்கேயே இருங்கள். நான் மானைப் பிடித்து வருகிறேன்.

ராம: வேண்டாம் தம்பி. நீ இங்கே பர்ணசாலையில் சீதைக்குக் காவலாக இரு. நான் வரும்வரை எங்கும் போய்விடாதே, மானை நானே பிடித்து வருகிறேன்.

கதை சொல் : ராமன் மானைத் தொடர்ந்தான். மான் வெகு தூரம் ஓடிக் களைத்து ஓரிடத்தில் நின்றது. தன் பிடியில் அகப் படாமல் இத்தனை தூரம் ஓடிவந்து தூரத்தில் மறைந்து நிற்கும் மான் வடிவம் ஒரு மாயை என்றறிந்து ராமன் பாணம் ஒன்றை எடுத்துக் குறிவைத்தான். மரணத்திற்கு முன் ராவணனுக்குச் செய்ய வேண்டிய நன்றிக் கடனை நிறைவேற்ற விரும்பிய மாரீசன் மற்றுமொரு சூழ்ச்சி செய்தான். 'ராமனுக்கு ஆபத்து வந்தது போல இருக்கட்டும், அப்போதுதான் பர்ண சாலையிலிருக்கும் லட்சுமணனையும் சீதையிடமிருந்து பிரிக்க முடியும்' என்று ஒரு சதி செய்தான். மரங்களிடையே மானின் புள்ளிகளைக் குறிவைத்து ராமன் பாணத்தை விட்டான்.

மாரீ: ஆ... சீதா.. லட்சுமணு.. அபாயம்...!

கதை சொல்: மானுக நின்ற மாரீசன் ராமனைப் போலவே குரல் கொடுத்தான். அபயக்குரல் பர்ணசாலைவரை எதிரொலித்தது. சீதை பதறினுள்.. துடித்தாள்.

சீதை: லட்சுமணு! லட்சுமணு! கேட்டாயா அந்த அபயக் குரலை! உன் அண்ணனுக்கு ஏதோ ஆபத்து... உடனே புறப்படு.

லட்சு: அண்ணி! கலங்காதீர்கள். அண்ணனுக்கு ஆபத்து ஏதுமிருக்காது..

சீதை: அப்படியானுல் இப்போது ஒலித்த அபயக்குரல்...?

லட்: தாயே! அபயம் அளிப்பவர் அண்ணன் ராமன். அவர் அபயக்குரல் கொடுத்திருக்கவே முடியாது. இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது.

சீதை: ஆம்.. எனக்குக்கூட தோன்றுகிறது. ஏதோ சூழ்ச்சி இருக்குமோ என்று — இல்லையென்றுல் அண்ணன் அபயக்குரல் கேட்டும் சற்றும் கலங்காமல் தம்பியாகிய நீ இங்கு நின்று கொண்டிருப்பாயா என்று!

லட்: தாயே! தாங்கள் என்ன சொல்கிறீர்கள்?

சீதை: உன்னை உடனே இங்கிருந்து போகச் சொல்கிறேன்.

ஆபத்திலிருக்கும் அண்ணனைக் காப்பாற்று என்கிறேன்.

லட்: தாயே! கலங்காதீர்கள். நிச்சயம் அண்ணன் ராமனுக்கு எதுவும் நிகழ்ந்திருக்காது. அந்த மானைப் பார்த்ததுமே நினைத்தேன்.. அது ஏதோ அரக்கர் மாயையாக இருக்குமோ என்று.. அண்ணன் அதனை அழித்துவிட்டே வருவார்.. அதுவரை...

சீதை: லட்சுமண.. இவ்வளவுதானா உன் சகோதர பாசம்.. அங்கே சகோதரன் 'சீதா.. லட்சுமணா... அபயம்' என்று ஈனக் குரல் கொடுத்ததைக் காதால் கேட்ட பின்பும் கலங்காமல் நிற்கிறாயே.. இதுவா நீ செய்யும் சேவை? ஒரு வேளை உன் மனதில் அடித்தளத்தில் ஏதேனும் கெட்ட எண்ணம் கொண்டு...

லட்சு: அம்மா! என்னவார்த்தைகள் சொல்லி விட்டீர்கள் அம்மா! களங்கமில்லாத தங்கள் மனதில் இப்படி எண்ணங்கள் ஏற்படலாமா? 'நான் வரும்வரை இந்த இடத்தைவிட்டுப் போகாதே' என்று அண்ணன் இட்ட கட்டளையை மீற முடியாமல்தான் தங்கள் கடுஞ்சொற்களையும் தாங்கிக் கொண்டு நிற்கிறேன் அம்மா!

சீதை: லட்சுமண.. இப்போது நான் கட்டளை இடுகிறேன்.. என்னை உன் தாயாக நீ எண்ணுவது சத்தியமானால் உடனே இங்கிருந்து புறப்பட்டு ஆபத்திலிருக்கும் அண்ணனுக்குத் துணை போ.. நீ மறுத்தால் உன் கெட்ட எண்ணம் எதுவும் நிறைவேறும் முன்பு நான் தீக்குளித்து உயிர் மாய்த்துக் கொள்வேன்..

லட்: இதென்ன சோதனை.. தாயே! வேண்டாம் தாயே வேண்டாம்! போகிறேன்.. இதோ போகிறேன்.. ஆனால், அஸ்திரத்தால் நான் கிழிக்கும் இந்தக் கோட்டின் எல்லையைத் தாண்டி தாங்கள் எங்கும் செல்ல வேண்டாம் என்று சிரம்தாழ்த்திக் கேட்டுக் கொள்கிறேன். இந்த எல்லை உங்களுக்கு எந்த ஆபத்தும் வராமல் காக்கட்டும்.. அண்ணா.. என்னை மன்னித்து விடுங்கள்.. தங்கள் கட்டளையை மீறும் நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது.. வருகிறேன் தாயே, வருகிறேன்! அண்ணனுடன் வருகிறேன் தாயே!

கதை சொல்: என்று கண்ணீருடன் பர்ணசாலையை விட்டு ஓடினான். கணவனுக்கு என்ன ஆகிவிட்டதோ என்ற ஏக்கத்தில் தன் நிலை மறந்து கள்ளங்கபடமற்ற லட்சுமணனை கடுஞ் சொற்களால் தாக்கி விட்டாள் சீதை.. ராமனுக்கு என்ன நேர்ந்ததோ என்ற கவலை எள்ளளவும் லட்சுமணனுக்கு இல்லை.. ஆனால் சீதா பிராட்டிக்கு ஏதும் நேர்ந்து விடக்கூடாதே என்றுதான் கலங்கினான் அவன். விதி அவனையும் பர்ணசாலையிலிருந்து பிரித்து

விட்டது. சீதை தனியே நின்ருள். ராவணன் திட்டம் நிறைவேறி விட்டது. பர்ணசாலையில் வந்து மறைவாக நின்ருன் ராவணன்.

ராவ: 'ஆகா.. எத்தனை அழகு இவள்..' தங்கை சூர்ப் பனகை இவள் அழகைக் குறைத்துக் கூறியிருக்கிருள். இவளை அடைய, பட்ட சிரமமும் சூழ்ச்சியும் வீண் போகவில்லை...'

கதை சொல்: என்று கர்வப்பட்டான். ஒரு தவமுனிவன் போல தன் உருவத்தை மாற்றிக் கொண்டு சீதை முன் நின்ருன் அந்த மாயாவி.

ராவ: சம்போ மஹாதேவ! அதிதியாக நிற்கிறேன் அம்மணி.. அன்னமிட்டு ஆதரிப்பாய் பெண்மணி.

சீதை: தவமுனிவரே.. மன்னியுங்கள். என் கணவர் ஆசிர மத்தில் இல்லை. சற்றுக் காத்திருங்கள்.. அவர் வந்ததும் இருவருமே தங்களை உபசரித்து அனுப்புகிருேம்.

ராவ: பெண்ணே! ஆண்டவன் திருவடிகளை எண்ணிக் காத் திருக்கும் அடியவன் அரைசாண் வயிற்றின் அன்னத்திற்காக காத்திருப்பதில்லை.. நான் வருகிறேன்..

சீதை: நில்லுங்கள் முனிவரே! கோபித்துக் கொள்ள வேண்டாம் முனிவரே.. ஏதோ இருப்பதைத் தருகிறேன்.. ஏற்றுச் செல்லுங்கள்..

கதை சொல்: சீதை பர்ணசாலையின் உள்ளே சென்று தானியங் களையும் பழங்களையும். எடுத்து வந்து லட்சுமணன் கிழித்த கோட்டினுள் நின்றுகொண்டு தவக்கோலத்தில் நின்ற



ராவணனுக்கு தருமம் செய்யத் தயாரானாள். லட்சுமணன் மந்திர சக்தியால் கிழித்த எல்லைக் கோட்டுக்குள் ராவணனால் அடி எடுத்து வைக்க முடியவில்லை. ஆகவே அந்தக் கபட வேடதாரி மற்றுமொரு சூழ்ச்சி செய்தான்.

ராவ: சம்போ மஹாதேவ! அம்மணி.. என்ன காரியம்செய்யத் துணிந்தாய்.. மந்திரத்தில் கட்டுப்படுத்தப்பட்ட எல்லைக்குள் நின்று தானம் செய்கிறாயே.. இது மகா பாபமல்லவா.. மஹேசனின் அடியவர்கள் இப்படிப் பிச்சை பெற்றுப் பாவத்தைத் தேடிக் கொள்வதில்லை. விருப்பமின்றிச் செய்யும் தானத்தை நான் ஏற்றுக்கொள்வதில்லை.வருகிறேன்.



சீதை: நில்லுங்கள்.. என்னை மன்னித்து விடுங்கள். இதனை நான் கவனிக்கவில்லை.. இந்தாருங்கள்..

கதை சொல்: சீதை லட்சுமணன் கிழித்தகோட்டைத் தாண்டினாள். அவ்வளவுதான்.. ராவணன் தன் கபட வேடத்தைக் கலைத்து



பத்துத் தலை இருபது கரங்களுடன் அரக்கன் ராவணனாக நின்றான்.

ராவ: பெண்ணே என்னைத் தெரிகிறதா?

சீதை: யார் நீ? என் கணவரில்லாத வேளையில் ஏன் இப்படிக் கபட நாடகம் ஆடினாய்? அவர் வருமுன் இங்கிருந்து போய்விடு. இல்லையேல் நீ அழிந்து விடுவாய்..

ராவ: என்னை அழிப்பது அவ்வளவு சுலபமல்ல. நான் சாகா வரம் பெற்றவன். தென்னிலங்கை அதிபதி ராவணேஸ்வரன்.. பெண்ணே! உன்மீது கொண்ட ஆசையால் உன்னைச் சிறையெடுத்துப்போக வந்தேன்.



கதை சொல்: பயத்தாலும் அதிர்ச்சியாலும் சீதை நினை விழந்து விழுந்தாள். அவள் விழுந்த இடத்தைத் தரையோடு பெயர்த்து எடுத்துத் தன் புஷ்பக விமானத்தில் வைத்துக் கொண்டு விண் வழியே புறப்பட்டான் ராவணன். திடீரென கண்விழித்த சீதை தான் ஆகாய மார்க்கமாகத் தூக்கிச் செல்லப்படுவதை அறிந்தாள்.. பதறினள்.. கதறினள்.. ராவணனிடம் தன்னை விட்டு விடும்படி மன்ருடினள்.. போராடிக் கூடப் பார்த்தாள்.. பலனில்லாமல் போய்விட்டது. யாரேனும் உதவிக்கு வரமாட்டார்களா என்ற நம்பிக்கையில் அபயக்குரல் கொடுத்தாள். அவள் நம்பிக்கை வீண் போகவில்லை. அந்தப் பகுதியில் கானகத்தில் வாழ்ந்து வந்த கழுகுகளின் ராஜா ஜடாயு, ஒரு தடவைத் தன்னை ஒரு ஆபத்திலிருந்து காப்பாற்றியதற்காக தசரதச் சக்ரவர்த்திக்கு நன்றிக் கடன் பட்டு அவருக்கு நண்பனுக இருந்தது. தசரதனின் புதல்வர்கள் ராம லட்சுமணர்களும்.. சீதையும் பஞ்சவடியில் வாழ்கிருர்கள் என்று தெரிந்ததும் ஜடாயு அங்கே சென்று ராமனைத் தரிசித்து மனமகிழ்ந்தது. திடீரென விண்ணிலே ஒரு பெண்ணின் அபயக் குரல் கேட்டதும் உதவிக்கு விரைந்தது ஜடாயு.. தன் மதிப்பிற்குரிய ராமனின் மனைவியை ராவணன் சிறையெடுத்துச் செல்கிருன் என்றறிந்ததும் அதன் ரத்தம் கொதித்தது. புஷ்பக விமானத்தைத் தடுத்து நிறுத்தி சீதையை விட்டுவிடும்படி ராவணனை எச்சரித்தது. ராவணன் கேட்கவில்லை. ஜடாயு ராவணனுடன் போரிட ஆரம்பித்தது. ஆனுல் ராவணன் அதர்ம யுத்தம் செய்ய ஆரம்பித்தான். ஜடாயுவின் சிறகுகளை வெட்டிவிட்டான். பாபம், ஜடாயு குற்றுயிராகக் கீழே விழுந்தது. ராவணன் தன் பயணத்தைத் தொடங்கினன். தனக்கு அனுசூயாதேவி அணிவித்திருந்த ஆபரணங்களையெல்லாம் கழற்றி ஒரு துணியில் கட்டி கீழே எறிந்தாள் சீதை. ஒருவேளை தன்னைத் தேடி வரும் தன் கணவருக்கு அவை அடையாளமாக இருக்கட்டும் என எண்ணினள். சில விஞடிகளில் ராவணன் இலங்கை வந்து அங்கே தன் அரண்மனை அந்தப்புரத்தில் அசோக வனம் ஒன்றில் சீதையைச் சிறை வைத்தான். இதற்கிடையில் ராம லட்சுமணர்கள் என்ன ஆனுர்கள் என்று பார்ப்போம். ராமபாணம் தைத்துத் தரையில் விழுந்த மாரீசன் ராமனிடம் உண்மைகளை உரைத்துவிட்டு உயிர்த் துறந்தான். அப்போது லட்சுமணன் அங்கே வந்தான்.

ராமன்: தம்பீ.. ஏனப்பா சீதையை பர்ணசாலையில் தனியே விட்டு வந்தாய்...?

லட்: அண்ணு மன்னியுங்கள்.. நானுக வரவில்லை. தங்களுக்கு ஆபத்து நேர்ந்திருக்கலாமென அஞ்சி, அன்னையார் என்னை உடனே போகும்படிக் கட்டளையிட்டார்கள். நான் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவர்கள் கேட்க

வில்லை. கடுமையான நிர்ப்பந்தத்தில் தங்கள் கட்டளையை மீறிய இந்தப் பாவியை மன்னித்து விடுங்கள்..

ராம: கலங்காதே லட்சுமண.. இது இலங்கை வேந்தன் ராவணனின் சூழ்ச்சி என்பதை இந்த மாரீசன் கண் மூடும் முன் ஒத்துக் கொண்டான். புறப்படு, உடனே சீதைக்கு ஆபத்து ஏற்படுமுன் நாம் காப்பாற்ற வேண்டும்.

கதை சொல்: ராமலட்சுமணர்கள் பர்ணசாலைக்கு விரைந்தனர். அங்கே சீதை இல்லை என்றறிந்ததும் ராமன் மூர்ச்சித்து விட்டான். எதற்குமே கலங்காதவன் குழந்தைபோல அழுதான். துன்பத்தைக் கண்டு கலங்கவில்லை அவன். பிறர் துன்பத்தைக் கண்டுதான் கலங்கினான். தன் பிறிவினாலும் ராவணனின் கொடுமைகளாலும் சீதை என்ன துயரம் அடைகிறாளோ என்று எண்ணிக் கதறி அழுதான். தான் பர்ணசாலையை விட்டு வந்ததால்தானே இந்த நிலை ஏற்பட்டது என்று லட்சுமணன் துடித்தான்.. ''சீதா.. சீதா..'' என்று குரல் கொடுத்துக் கொண்டே ராம லட்சுமணர்கள் வனத்தில் அவளைத் தேடி அலைந்தார்கள். அப்போது எங்கோ ஒரு ஈனக் குரல் கேட்டது.. இருவரும் குரல் வந்த திக்கில் பார்த்தனர்.. அங்கே சிறகுகள் அறுபட்டு இரத்த வெள்ளத்தில் குற்றுயிராகக் கிடந்தது ஜடாயு.

ஜடா: ராமா.. தசரத புத்ரா.. நமஸ்கரிக்கிறேன்.. என்னைத் தெரிகிறதா...?

ராம: நன்றாகத் தெரிகிறது. தாங்கள் ஜடாயு.. என் தந்தையின் உற்ற நண்பன்.. தங்களுக்கு இந்தக் கதி எப்படி ஏற்பட்டது?

ஜடா: ராமா.. அதிர்ச்சியடையாமல் கவனமாகக் கேள். தென்னிலங்கை வேந்தன் ராவணன் உன் மனைவி சீதையைச் சிறைப்பிடித்து விண் வழியே சென்று கொண்டிருந்தான். நான் தடுத்தேன்.. அன்னையைக் காக்க அவனுடன் போராடினேன்.. ஆனால் என்னால் அன்னையைக் காப்பாற்ற முடியவில்லை ராமா. ராவணன் என் சிறகுகளை வெட்டி என்னை வீழ்த்தி விட்டான்.

ராம: ஐயா.. தங்களுக்கு எப்படி நன்றி சொல்லப் போகிறேன்.. தீமையைக் கண்டு அஞ்சாமல் போரிட்டுத் தன்னையே அழித்துக் கொண்ட தங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்.

ஜடா: ராவணன் தென்திசையில்தான் சென்றான்... அங்கே அன்னையைத் தேடுங்கள். நிச்சயம் காண்பீர்கள்.. ராமா! உயிர்த்துறக்குமுன் உன் தரிசனம் கிடைத்தது என் பாக்கியம்.. உன் பாதங்களில் என் தலை சாய்வது நான் செய்த புண்ணியம்.

கதை சொல்: ஜடாயு உயிர்துறந்தது. தந்தை தசரதனுக்கு ஈமக்கிரியைகள் செய்யும் வாய்ப்பைப் பெருத ராமன் ஜடாயுவுக்கு இறுதிச் சடங்குகளைச் செய்தான்.. ராமசேவை செய்து ஜடாயு மோட்சமடைந்தது. தென்திசை நோக்கி ராமன் புறப்பட்டான். லட்சுமணன் அவரைப் பின் தொடர்ந்தான்.



திடீரென அந்த வனத்தில் விநோதமான ஒரு ஜந்து காணப் பட்டது. அதற்குக் கழுத்தும் கிடையாது. தலையும் கிடையாது. நகர்ந்துசெல்ல கால்களும் கிடையாது. வயிற்றில் அகன்ற வாய், கூறிய பற்கள்.. நீண்ட, நாக்கு நெடுந்தூரம் வரை நீட்டக்கூடிய இரண்டு கைகள்! அந்தக் கோர உருவம்தான் கபந்தன். பிராணி



களையும், மனிதர்களையும் தன் கரங்களால் இறுகப் பிடித்துத் தன் பெரிய வாயில் போட்டு விழுங்கிவிடுவான் அவன். எதிர் பாராத ஒரு நொடியில் கபந்தனின் நீட்டிய கரங்களில் லட்சுமணன் மாட்டிக் கொண்டான். கண் இமைக்கும் நேரத்தில் தன் பாணத்தால் கபந்தனின் கரங்களை அறுத்து இளையவனைக் காத்தான் ராமன். கபந்தன் பேசினான்...

கபந்தன்: ஐயா! தாங்கள் இருவரும் தசரத குமாரர்கள் ராம லட்சுமணர்கள்தானே...?

ராம: ஆம்; நீ யார்?

கப: என் பெயர் கபந்தன்.. என் ஒழுக்கக் கேட்டினால் இந்திரன் ஒருமுறை சாபமிட்டான். அதனால் இந்த கோர உருப் பெற்றேன். இன்று உன் அஸ்திரம் பட்டு எனக்கு நல்ல காலம் பிறந்து விட்டது. எனக்காக ஒரு உதவி செய்யுங் கள்.. என்னைச் சுற்றித் தீ மூட்டி விடுங்கள்.. அதனால் உங்களுக்கு நன்மை உண்டாகும்..

கதை சொல்: ராம லட்சுமணர்கள் கபந்தன் உடலுக்குத் தீ மூட்டினர்.. அதனுள்ளிருந்து ஜோதி வடிவம் ஒன்று விண்ணில் வெளிப்பட்டு அசரீரி தந்தது.

அசரீரி: ராமலட்சுமணர்களே! கவலை வேண்டாம். சீதைக்கு ஒரு ஆபத்தும் வராது. விரைவில் சீதையைக் காண்பீர்கள். இந்த வனத்தைக் கடந்து பம்பாநதிதீரம் செல்லுங்கள்.. அங்கே ரிஷியமுக மலைச்சாரலில் உங்களுக்காக இரண்டு வானர வீரர்கள் காத்திருக்கின்றனர். அவர்களால் உங்களுக்கு நன்மை கிடைக்கும்..?

கதை சொல்: ஜோதி வடிவம் விண்ணில் மறைந்தது. ராம லட்சுமணர்கள் சற்று ஆறுதலடைந்தனர். பம்பா நதி நோக்கி அவர்கள் பயணம் தொடங்கியது.

பம்பா நதிக்கரையில் மதங்க முனிவர் என்பவரின் ஆசிரமம் இருந்தது. அந்தப் பகுதியில் சபரி என்ற ஏழைக் கிழவி ஒருத்தி வாழ்ந்து வந்தாள். தவம் புரிவோர்க்குத் தொண்டு செய்வதே அவள் பணி. இறைவன் திருவடி தவிர வேறெதிலும் பற்றற்று வாழ்ந்தாள். மதங்கமுனிவர் மறையும் முன்பு சபரியிடம் ஒரு உண்மையைக் கூறியிருந்தார்.

மதங்க முனிவர்: சபரி பகவான் ஸ்ரீமன் நாராயணன் இப் பூவுலகில் மானிடனாக அவதரிக்கிறான். அது வேறு யாரு மல்ல. கோசல நாட்டு ராஜகுமாரன் ராமன்தான். சில காலம் தவம் புரிய அவன் இவ்வனத்துக்கு வருவான்.. அப்போது அவன் தரிசனத்தால் உன் ஜென்மம் சாபல்யமடையும்.. நீ மோட்ச பதவி அடைவாய்..

கதை சொல்: சபரி ராம பக்தியில் ஈடுபட்டாள். சதா ராம

நாமத்தையே ஜெபித்தாள். பக்தியோடும் பிரேமையோடும் ராமனுக்காகக் காத்திருந்தாள். ராமன் ஒருநாள் சபரியின் ஆசிரமத்திற்கு வந்து அதிதியாகத் தங்கினன்.

சபரி: பிரபு! ராமச்சந்திரா...இந்த ஏழையையும் ஒரு பொருட்டாக்கி என் குடிலுக்கு வந்திருக்கிருயே, உன் கருணையே கருணை. உன் தரிசனத்துக்காகத்தான் இந்தத் தள்ளாடிய உடலில் உயிரை இன்றுவரை ஒட்டவைத்துக் கொண்டிருந்தேன். இன்று உன்னைப் பார்த்ததும் என் ஜென்மம் சாபல்யம் அடைந்துவிட்டது.

ராமன்: தாயே! இத்தனை பக்தியோடும், அன்போடும் எனக்காகக் காத்துக் கொண்டிருந்த உங்கள் தரிசனத்தால் என் வனவாசத்தின் பயனை அடைந்துவிட்டேன்.

சபரி: ராமா! ஏதோ ஏழை... என்னிடம் எதுவுமேஇல்லை, உன்னை உபசரிக்க. காடெலாம் கால்கடுக்கச் சுற்றி சில நாவல் பழங்களைப் பொறுக்கி அதில் புளிக்காதப் பழங்களாக உனக்கு வைத்திருக்கிறேன். அரண்மனையில் வாழ்ந்த கோமான் நீ. இது உனக்குப் பிடிக்குமோ, என்னமோ...?

ராமன்: அம்மா — கொடுக்கும் பொருள்களைப்பற்றி நான் எண்ணுவதேஇல்லை. கொடுக்கும் உள்ளங்களின் அன்புக்கும், பாசத்துக்குமே நான் அடிமைப்பட்டுவிடுகிறேன். ராமன் கனிகளைச் சுவைத்துக் கொண்டிருந்தான். சபரி அவன் புகழ் பாடிக்கொண்டே தன் வாழ்க்கையின் இறுதி மூச்சைவிட நினைத்தாள்.

பாட்டு:

அயோத்யவாஸி ராம்... ஆனந்தரூபா ராம்...
தசரத நந்தன ராம ஜெயஜெய
ஜானகி ஜீவன ராம்...

அஹல்யஉத்தன ராம்... ஆரண்யவாஸிராம
தசரத நந்தன ராமஜெய ஜெய
ஜானகி ஜீவனராம்

லக்ஷ்மண ஸேவித ராம்... லக்ஷ்மிமனோஹரராம்
தசரத நந்தன ராம ஜெய ஜெய
ஜானகி ஜீவனராம்

பக்த்ரக்ஷகாராம்.. பதிதபாவனராம்
தசரதநந்தன ராம ஜெய ஜெய
ஜானகி ஜீவனராம்

கதை சொல்பவர்: சபரி மோட்சமடைந்தாள். சீதையைத் தேடும்



பணி தொடர்ந்தது. ருஷ்ய முகமலைச் சாரலை நோக்கி வழி நடந்தான். ஆரண்யராமன். நிழலாகப் பின் தொடர்ந்தான் தம்பி லட்சுமணன்.

இதுவரை கேட்டது: ஆரண்ய காண்டம்.
அடுத்தது: கிஷ்கிந்தா காண்டம்.





இதுவரை
ஆரண்ய காண்டம்
கேட்டீர்கள்.

எமது அடுத்த
காஸெட்டில்

கிஷ்கிந்தா காண்டம்

ஸ்ரீராம் ஜெயராம்
ஜெயஜெயராம்
ஸ்ரீராம் ஜெயராம்
ஜெயஜெயராம்

பதிப்பு உரிமை:
இதயம் எஜுகேஷனல்
காஸெட்ஸ்

Idhayam Educational Cassettes
26, Murrays Gate Rd, Madras-600018.
TEL : 441426